# இலங்கையின் சமகால
# சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகள்
# Contemporary Socioeconomic Issues in Sri Lanka.

அமரர் இலக்கிய கலாநிதி நாகலிங்கம் பாலகிருஸ்ணன்
அவர்களின் சேவை விதப்பு வெளியீடு

**A Festschrift in Honour of Late Dr. N.Balakirishnan**

பதிப்பாசிரியர்:

**சிதம்பரநாதன் உதயகுமார்**

பிரதம பதிப்பு ஆலோசகர்:

**பேராசிரியர் பசுபதி சிவநாதன்**

**வெளியீடு:**

**பொருளியல் துறை, கலைப்பீடம்,**

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

**2014**

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | "இலங்கையின் சமகால சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகள்" அமரர் இலக்கிய கலாநிதி நாகலிங்கம் பாலகிருஸ்ணன் சேவை விதப்பு வெளியீடு |
| பதிப்புரிமை | : | @2014 திரு. எஸ். எஸ். உதயகுமார் |
| பதிப்பாசிரியர் | : | சிதம்பரநாதன் உதயகுமார் |
| வெளியீடு | : | பொருளியல் துறை, கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம், இலங்கை. |
| அச்சுப் பதிப்பு | : | குரு பிறிண்டேர்ஸ், 39/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். |
| பக்கங்கள் | : | C + 250 |
| விலை | : | 1000/= |

| | | |
|---|---|---|
| ***Title*** | : | "Contemporary Socioeconomic Issues in Sri Lanka" A Festschrift in Honour of Late Dr. N.Balakirishnan |
| ***Copy right*** | : | @ 2014 by Mr. S. S. Uthayakumar |
| ***Edited by*** | : | Sithamparanathan Uthayakumar |
| ***Published by*** | : | Department of Economics, Faculty of Arts, University of Jaffna, Jaffna, Sri Lanka. |
| ***Printed by*** | : | Guru Printers, 39/2, Adiyapatham Road, Thirunelvely, Jaffna. |
| ***ISBN*** | : | **978 955 0585 05-2** |
| ***Pages*** | : | C + 250 |
| ***Price*** | : | 1000/= |

இந்நூலில் இடம்பெற்றுள்ள கட்டுரைகளின் உள்ளடக்கத்திற்கும் கருத்துக்களுக்கும் கட்டுரையாசிரியர்களே பொறுப்பாவர்.

# உலக நாடுகளின் பொருளாதார வளர்ச்சிப் போக்கில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளும் அது தொடர்பாக வளர்ச்சிப் பொருளியலாளர்களால் குறிப்பிடப்படும் நியாயங்களும்.

எஸ். எஸ். உதயகுமார்
தலைவர்,
பொருளியல் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

## அறிமுகம்

பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி என்ற இரு எண்ணக்கருக்களும் பொருளாதார விவாதங்களில் ஒரே கருத்தில் பயன்படுத்தப்படுகின்ற போதிலும் கற்பித்தல் செயற்பாடுகளில் இவை இரண்டும் வேறுபடுகின்றன. இங்கு ஒரு நாட்டின் மொத்த தேசிய உற்பத்தி, தலாவருமானம் என்பவை நீண்டகாலத்தில் அதிகரித்துச் செல்லுதலைக் குறித்து நிற்கும் ஒரு எண்ணக்கருவாக பொருளாதார வளர்ச்சி என்பது விளங்குகின்றது. இங்கு பொருளாதார வளர்ச்சி வீதம் அதிகரிக்கும் போது அங்கு தலாவருமானமும் அதிகரித்துச் செல்கின்றது என்பது கருத்தாகும். மொத்த உள்நாட்டு உற்பத்தியை மொத்த சனத்தொகையால் பிரிக்க வருவது தலாவருமானமாகும். இதிலிருந்து வளர்ச்சிக்கும் சனத்தொகைக்கும் இடையிலான தொடர்பு விளங்குகின்றது. அதாவது வளர்ச்சி ஏற்பட வேண்டுமாயின் வெளியீட்டு அதிகரிப்பை விட குறைந்த வீதத்திலேயே சனத்தொகை அதிகரிப்பு ஏற்பட வேண்டும். இங்கு வெளியீட்டை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கும் போது சனத்தொகை அதிகரிப்பைக் கட்டுப்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. அடுத்து அபிவிருத்தி பற்றி நோக்கின், அதிகரித்த மொத்த தேசிய உற்பத்தி, தலாவருமானம் என்பவை நாட்டு மக்களிடையே எவ்வாறு பங்கிடப்படுகின்றது என்பதிலேயே அந்த நாட்டின் அபிவிருத்தி தங்கியுள்ளது. எனவே இதன் படி பொருளாதார வளர்ச்சி என்பது பொருளாதார அபிவிருத்திக்கு தேவையான ஒன்றாக உள்ள அதே நேரம் அபிவிருத்தி என்பது வளர்ச்சியை விட மேலான ஒன்றாகவும் உள்ளது என்ற விடயம் இலகுவாக உணரக்கூடிய ஒன்றாகும்.

இவ்வகையில் ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியைத் தீர்மானிக்கும் காரணிகள் என்ற வகையில் நாம் பின்வருவனவற்றைச் சுட்டிக்காட்டமுடியும்.

- ➢ பொருளாதாரக் கட்டமைப்பில் ஏற்படும் முன்னேற்றம் - எடுத்துக்காட்டாக விவசாயம், கைத்தொழில், சேவைகள் என்ற மூன்று துறைகளினதும் மொத்த உற்பத்திப் பெறுமதி என்பது அதிகரித்துக் கொண்டு செல்ல வேண்டும் அதே நேரம் விவசாயத்துறையின் பங்கு, உற்பத்தி மற்றும் தொழில் வாய்ப்பில் குறைவடைந்து செல்வதுடன் ஏனைய இரு துறைகளினது பங்கும் இவை தொடர்பாக அதிகரித்தும் செல்ல வேண்டும்.
- ➢ உற்பத்தி சார்ந்த முதலீடுகள் உருவாக்கப்படுதல் வேண்டும் எடுத்துக் காட்டாக மின்சாரம், தகவல் தொடர்புகள், வீதிகள், துறைமுகங்கள், நீர்ப்பாசனம்.
- ➢ மனித மூலதன உருவாக்கம் அதிகரிக்க வேண்டும்
- ➢ தொழில்நுட்பம் முன்னேற்றமடைய வேண்டும்
- ➢ தொழிலாளர் படை வளர்ச்சியடைய வேண்டும்.

- ➢ புதிய புதிய உற்பத்தி சாதனங்கள் கண்டுபிடிக்கப்படல் வேண்டும்
- ➢ ஏற்றுமதிக்கான சந்தை வாய்ப்புக்கள் உருவாக்கப்படுவதோடு உள்நாட்டுச் சந்தையும் விரிவடைய வேண்டும்.
- ➢ முதலீட்டிற்கும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கும் சாதகமான சமூக பொருளாதார அரசியல் சூழ்நிலைகள் உருவாக்கப்படுதல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட பொருளாதார வளர்ச்சியைத் தீர்மானிக்கும் காரணிகள் சாதகமான நிலையில் காணப்படுமானால் அந்த நாடு பொருளாதார ரீதியாக வளர்ச்சியடைந்த நாடாகக் கருதப்படும். அதேநேரம் மொத்த தேசிய உற்பத்தி அதிகரிப்பு மற்றும் தலாவருமான அதிகரிப்புடன் வருமானப் பங்கீட்டில் காணப்படும் சமமின்மை குறைவடைதல், கல்வியில் முன்னேற்றம் ஏற்படுதல், சுகாதார மருத்துவ வசதிகளில் முன்னேற்றம் ஏற்படுதல், போசாக்கு மட்டம் முன்னேற்றமடைதல், வீட்டு வசதிகளின் முன்னேற்றம் என்பவற்றின் ஊடாக நாட்டின் வறுமை நிலை குறைவடைந்து மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வடைதலையே அபிவிருத்தி என்ற பதம் குறித்து நிற்கும்.

பொதுவாக பொருளியலாளர்களால் எடுத்துக் காட்டப்படும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் வளர்ச்சிக் குறைவுக்கான காரணங்கள், அந்த நாடுகளில் குறைந்த தலாவருமானம், அதிக சனத்தொகை வளர்ச்சி, தங்கியிருப்போர் சுமை கூடுதலாக இருத்தல், உயர்ந்தளவு வேலையின்மை, கீழுழைப்பு நிலை காணப்படுதல், குறைந்த சுகாதார வசதி, குறைந்த கல்வித்தரம், விவசாயத்தில் அதிகம் தங்கியிருத்தல், இரட்டைப் பொருளாதார நிலை காணப்படுதல், குறைந்த உற்பத்தித் திறன், முதல் விளைவுப் பொருட்களின் ஏற்றுமதியில் தங்கியிருத்தல் போன்ற பொதுப் பண்புகள் சுட்டிக்காட்டப்படுகின்றன. ஆகவே இத்தகைய பண்புகள் நாடுகளின் வளர்ச்சி தொடர்பான ஏற்றத்தாழ்வுகளுக்கும், வளர்ச்சியின்மைக்கும் அல்லது குறைவான வளர்ச்சிக்கும் காரணங்களாக அமைகின்றன. மூலதனத் திரட்சி, சனத்தொகை வளர்ச்சி அதனூடாக உழைப்பு சக்தியில் ஏற்படும் அதிகரிப்பு மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றம் என்ற மூன்று விடயங்களுடன் ஒழுங்கமைப்பு என்ற விடயமும் இணைந்து நாடுகளின் வளர்ச்சி நிலையில் ஏற்றத் தாழ்வுகளை ஏற்படுத்தியுள்ளது எனலாம். இவ்வகையில் இங்கிலாந்தில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சியைத் தொடர்ந்து கடந்த 200 ஆண்டுகளில் உலக நாடுகளின் பொருளாதார வளர்ச்சி நிலையானது ஏற்றத்தாழ்வாக இருப்பதை அறியலாம். இதனை உலக வங்கி உலக நாடுகளை வகைப்படுத்தியுள்ள நிலையில் இருந்து நாம் அறிந்து கொள்ளலாம். உலக நாடுகளை,

1. குறைவான வருமான நாடுகள்
2. இடை நிலை வருமான நாடுகள்
3. உயர் நிலை வருமான நாடுகள்
4. உயர் வருமான நாடுகள் என நான்காக உலக வங்கி வகைப்படுத்தியுள்ளது.

இவ்வகையில் உலக நாடுகளின் வளர்ச்சி தொடர்பாக நிலவும் ஏற்றத்தாழ்வுகளுக்கு வளர்ச்சிப் பொருளியலாளர்களால் முன் வைக்கப்படும் நியாயப்பாடுகளைச் சற்று விரிவாக நோக்குவோம்.

## நாடுகளின் வளர்ச்சி வேறுபாடும் அதற்கான காரணங்களும்

அதாவது, அபிவிருத்தி அடைந்த நிலையில் உள்ள நாடுகள் பொருளாதார வளர்ச்சியினை அடைந்த போது அந்த நாடுகளில் அப்போது நிலவிய சூழ்நிலை தற்போது அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் நிலவுகின்ற சூழ்நிலையும் வேறுபட்ட தன்மை கொண்டு காணப்படுவதால், Prof. Siman Kuznets என்பவரின் கருத்துப்படி குறிப்பிட்ட நாட்டின் மக்களைக் குறித்து பன்முகப்படுத்தப்பட்ட பொருளாதாரப் பொருட்களின் நிரம்பலைச் செய்யும் இயலளவு

➤ நீண்டகாலத்தில் அதிகரித்துச் செல்வதையும் இத்தகைய வளர்ந்து செல்லும் இயலளவானது முன்னேறிச் செல்கின்ற தொழில்நுட்பத்தினை அடிப்படையாகக் கொண்டிருப்பதனையும் அதற்கேற்ற வகையில் நிறுவன ரீதியான, கருத்தியல் ரீதியான மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்பதையுமே பொருளாதார வளர்ச்சி என்பது குறிக்கின்றது.

முன்னேறிச் செல்கின்ற தொழில்நுட்பத்தினை அடிப்படையாகக் கொண்டிருப்பதனையும் அதற்கேற்ற வகையில் நிறுவன ரீதியான, கருத்தியல் ரீதியான மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்பதையுமே பொருளாதார வளர்ச்சி என்பது குறிக்கின்றது.

➢ இவருடைய கருத்துப்படி,

1) தேசிய வருமானத்தில் ஏற்படும் தொடர்ந்த அதிகரிப்பு பொருளாதார வளர்ச்சியினை காட்டும் ஒரு பண்பாகும். அத்துடன் பல்வேறு வகைப்பட்ட பொருட்களையும் வழங்கக்கூடியதாக இருக்கும் தகுதி என்பது பொருளாதார முதிர்ச்சியின் ஒரு குறியீடாகும்.

2) முன்னேறிச் செல்லும் தொழில்நுட்பம் என்பது தொடர்ச்சியான பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையாக அல்லது முன்நிபந்தனையாக அமையும். இது அத்தியாவசியமான நிபந்தனையே தவிர போதுமான ஒரு நிபந்தனை அல்ல.

3) முன்னேறிச் செல்லும் மனித அறிவின் இருப்பினால் ஏற்படுத்தப்படும் புத்தாக்கங்களை திறமையான முறையில் பயன்படுத்த அதாவது, தொழில்நுட்ப முன்னேற்றங்களை பரந்தளவில் அபிவிருத்திக்கு பயன்படுத்த நிறுவன ரீதியான, கருத்தியல் ரீதியான மாற்றங்கள் ஏற்படுத்தப்படுதல் வேண்டும். அதாவது, நவீன தொழில்நுட்பக் கண்டுபிடிப்புக்களுக்கேற்ப சமூகமும் மாற்றமடைந்து செல்லுதல் வேண்டும் என்றார்.

மேலும், நவீன பொருளாதார வளர்ச்சி என்பது ஒரு பொருளாதாரத்தின் திருப்பு முனையைக் குறிக்கின்றது. Prof. Siman Kuznets என்பவரின் கருத்துப்படி வளர்ச்சியடைந்த பொருளாதாரங்களின் தேசியவருமானத்தையும் அவற்றின் மூலக்கூறுகளான சனத்தொகை, தொழிலாளர் படை போன்ற விடயங்களையும் ஆராய்ந்து நவீன பொருளாதார வளர்ச்சியானது:

- ❖ உயர்ந்த அளவிலான தலா உற்பத்தியும் சனத்தொகையினதும் வளர்ச்சியும்
- ❖ காரணிகளின் உற்பத்தித் திறனில் ஏற்பட்ட குறிப்பாக உழைப்பின் உற்பத்தித் திறனில் ஏற்பட்ட உயர்ந்த வீத அதிகரிப்பு
- ❖ உயர்ந்த அளவிலான கட்டமைப்பு மாற்றம்.

❖ உயர்ந்த வீதத்தில் ஏற்பட்ட சமூக கருத்தியல் ரீதியான மாற்றங்கள்
❖ வளர்ச்சி அடைந்த நாடுகளின் வெளிநோக்கிய விரிவாக்கம்
❖ பொருளாதார வளர்ச்சியின் வரையறுக்கப்பட்ட பரவல்

ஆகிய 6 குணாம்சங்களைக் கொண்டுள்ளதாகக் குறிப்பிடுகின்றார். இவற்றை சற்று விரிவாக நோக்கின்,

## உயர்ந்த அளவிலான கட்டமைப்பு மாற்றம்

உயர்ந்த அளவிலான கட்டமைப்பு மாற்றம் என்ற வகையில் உயர்வருமான நாடுகளில் விவசாயம், கைத்தொழில் மற்றும் சேவைகள் துறையின் பங்கானது முறையே 1980 இல் 3%, 37%, 58% ஆகவும் 1995 இல் 2%, 32%, 66% ஆகவும் காணப்பட்ட போதிலும் தாழ் வருமான நாடுகளில் விவசாயம், கைத்தொழில் மற்றும் சேவைகள் துறையின் பங்கானது முறையே 1980 இல் 34%, 32%, 32% ஆகவும் 1995 இல் 25%, 38%, 55% ஆகவும் காணப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## உயர்ந்த அளவிலான உற்பத்தி மற்றும் சனத்தொகை வளர்ச்சி

*உயர்ந்த அளவிலான தலா உற்பத்தி மற்றும் சனத்தொகை வளர்ச்சி* என்ற வகையில் வளர்ச்சி குன்றிய நாடுகள் பெரும்பாலும் இரண்டாம் உலகப் போரின் பின்னர் தான் வளர்ச்சியைத் தொடங்கின. இந்த நாடுகளில் 1850-1950 வரையான காலப்பகுதியில் சராசரியாக வருடமொன்றுக்கு 1% சனத்தொகை வளர்ச்சியையே கொண்டிருந்தன. 1950 இன் பின் இவ்வீதம் 2% இனை விட அதிகரிக்கத் தொடங்கியது. சில வளர்ந்து வரும் நாடுகளில் இன்று இவ்வீதம் 3% வரை உள்ளதையும் காணலாம். ஆனால், வளர்ந்த நாடுகளில் வளர்ந்த சூழ்நிலையில் அந்த நாடுகளின் சூழ்நிலைக்கேற்ப சாதகமாக இருந்தது. தற்போது குறிப்பாக 1970களின் பின் சனத்தொகை அதிகரிப்பு வருடாந்தம் 1% ஆகவும் தலா உற்பத்தி அதிகரிப்பு வருடாந்தம் 2% ஆகவும் காணப்படுவதால் மெய் ரீதியாக உற்பத்தி அதிகரிப்பானது 3% ஆக அமைந்திருந்தது. நாடுகளின் வளர்ச்சி தொடர்பான ஏற்றத்தாழ்வுக்கு இதுவும் ஒரு காரணமெனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

## உற்பத்தித் திறன் அதிகரிப்பு

*காரணிகளின் உற்பத்தித் திறனில் ஏற்பட்ட குறிப்பாக உழைப்பின் உற்பத்தித் திறனில் ஏற்பட்ட உயர்ந்த வீத அதிகரிப்பு* என்பது கூட நாடுகளுக்கிடையில் காணப்படும் வேறுபாடு காரணமாக நாடுகளின் வளர்ச்சி தொடர்பான ஏற்றத்தாழ்வு காணப்படக் காரணமாக உள்ளதெனக் குறிப்பிடுகின்றார்.

## சமூக கருத்து ரீதியான மாற்றங்கள்

உயர்ந்த வீதத்தில் ஏற்பட்ட சமூக கருத்தியல் ரீதியான மாற்றங்கள் என்ற வகையில்,

➢ பகுத்தறிவு
➢ பொருளாதாரத் திட்டமிடல்
➢ சமூக பொருளாதார சமப்படுத்தல்

- ➢ சமூகமனப்பான்மை, மற்றும் சமூக நிறுவனங்களில் முன்னேற்றம் ஏற்படல் வேண்டும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## வளர்ச்சி அடைந்த நாடுகளின் வெளிநோக்கிய விரிவாக்கம்

வளர்ச்சி அடைந்த நாடுகளின் வெளிநோக்கிய விரிவாக்கம் என்ற வகையில் பொருளாதார வளர்ச்சி குறித்து சர்வதேச ரீதியான அம்சங்களில் Siman Kuznets பின்வரும் 3 விடயங்களை அடையாளங் கண்டுள்ளார் அவையாவன:

- ➢ தொலைத் தொடர்பிலும் போக்குவரத்திலும் ஏற்பட்ட தொழில் நுட்பரீதியான முன்னேற்றம் மேற்கு ஐரோப்பிய நாடுகளை உலகின் ஏனைய நாடுகளுக்குச் செல்ல வழி வகுத்ததுடன் ஏனைய நாடுகளுடன் தொடர்புகளை வைத்திருக்கவும் உதவி செய்தது.
- ➢ நவீன பொருளாதார வளர்ச்சியானது 18 ஆம் நூற்றாண்டில் முதன் முதலில் இங்கிலாந்தில் ஆரம்பித்து ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கும் பின்னர் பரவியது.
- ➢ 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் யப்பானும் 1930களில் சோவியத் ஒன்றியமும் நவீன பொருளாதார வளர்ச்சிச் செயன்முறைக்குள் உள் நுழையும் வரை இந்த நவீன பொருளாதார வளர்ச்சியானது ஐரோப்பிய நாடுகளுக்கிடையிலும் அதன் பக்கத்திலிருந்த சில நாடுகளுக்கிடையேயும் மட்டுமே பரவியிருந்தது.

## பொருளாதார வளர்ச்சியின் வரையறுக்கப்பட்ட பரவல்

பொருளாதார வளர்ச்சியின் வரையறுக்கப்பட்ட பரவல் என்ற வகையில் நவீன பொருளாதார வளர்ச்சியானது உரிய முறையில் எல்லோருக்கும் பரவவில்லை. அதாவது, பொருளாதார வளர்ச்சியின் பலாபலன்களில் 80 % பங்கினை வளர்ந்த நாடுகளில் உள்ள 18% மக்கள் அனுபவிக்கின்ற நிலை காணப்படுவதுடன் வளர்ச்சியின் பலாபலன்கள் ஏற்றத்தாழ்வாகப் பங்கிடப்படுகின்ற வகையில் வளர்ச்சியடைந்து வரும் நாடுகளுக்குப் பரவத்தவறியமைக்கு கீழ்வரும் இரு காரணங்கள் பொறுப்பாக அமைகின்றன.

- ❋ இந்த நாடுகள் உறுதியானதும் நெகிழத்தக்கதுமான அரசியல் சமூக அமைப்பைக் கொண்டிருக்கவில்லை. அதாவது விரைவான அமைப்பு மாற்றங்களை ஏற்றுக் கொள்ளும் சமூகத்தில் வளர்ச்சியை முன்னேற்றும் குழுக்களைக் கொண்டிருக்கவில்லை.
- ❋ குடியேற்ற வாதக் கொள்கைகள் காரணமாக அபிவிருத்தி அடைந்த நாடுகள் வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளின் அரசியல் பொருளாதார சுதந்திரங்களைக் கட்டுப்படுத்தி வைத்திருந்தன. இதனால் நவீன பொருளாதார வளர்ச்சியின் நன்மைகள் அபிவிருத்தி அடைந்து வரும், நாடுகளுக்குப் பரவாமல் இருந்ததுடன் அவை தொடர்ந்தும் பின்தங்கிய நாடுகளாக இருந்தன என்று எடுத்துக்காட்டியுள்ளார்.

இவ்வகையில் Siman Kuznets என்பவர் தன்னுடைய ஆய்வில் மேற்குலக நாடுகள் குடியேற்ற நாடுகளின் செல்வங்களைச் சுரண்டிய விடயம் பற்றி அதிகம் கவனத்தினைச்

செலுத்தாமல் இருந்தார் என்றே கூறுதல் வேண்டும். இது கூட நாடுகளின் வளர்ச்சி தொடர்பான ஏற்றத்தாழ்வுகளுக்கு காரணமாக அமைந்துள்ளதெனின் மறுக்க முடியாது.

**நாடுகளுக்கிடையிலான பொருளாதார வளர்ச்சி வேறுபாட்டுக்கான வரலாற்று ரீதியான காரணங்கள்**

அடுத்து அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கும் இடையில் வரலாற்று ரீதியான வளர்ச்சி அனுபவங்கள் தொடர்பாக ஆரம்ப நிலையில் காணப்படும் வேறுபாடுகளை நோக்குவதன் ஊடாக உலக நாடுகளின் பொருளாதார வளர்ச்சிப் போக்கில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளுக்கு வளர்ச்சிப் பொருளியலாளர்கள் குறிப்பிடும் நியாயங்கள் தெளிவாகின்றது. இந்த வகையில், வரையறையுடைய வரலாற்று ரீதியான வளர்ச்சி அனுபவங்கள் ஆரம்ப நிலையில் காணப்படும் வேறுபாடுகள் காரணமாக நாடுகளின் ஏற்றத்தாழ்வான வளர்ச்சிக்கு காரணமாக அமைந்துள்ளன. அந்த வகையில்

- பௌதீக மனித மூலவளக் கிடைப்பனவு.
  - ☆ பௌதீகப் பொருள் இடைவெளி (Physical objective gap)- தொழிற்சாலைகள், பாதைகள், நவீன இயந்திரங்கள் உள்ளடங்கும்
  - ☆ கருத்து அல்லது உத்தி இடைவெளி (Idea gap)- சந்தைப்படுத்தல், பங்கீடு, இருப்பு, இருப்புக்கட்டுப்பாடு, கொடுக்கல் வாங்கல் செயன்முறைகள், தொழிலாளர் நோக்கம், என்பவை பற்றிய அறிவுகள் உள்ளடங்கும். *Thomas Homer Nixon கருத்து, இது கூர்மதி இடைவெளி (Ingenuity gap) அதாவது நடைமுறையில் சமூக தொழில்நுட்பரீதியான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் புத்தாக்கக் கருத்துக்களைப் பிரயோகிக்கக்கூடிய தகுதியைக் குறிக்கும். இத்தகைய மனித வள இடைவெளி (Human resource gap) வேறுபடுகின்றது.
- ஒப்பீட்டு ரீதியில் காணப்படும் குறைந்த தலாவருமான மட்டம்.
- காலநிலை வேறுபாடுகள்.
- சனத்தொகை அளவு , பங்கீடு , வளர்ச்சி
- இடப்பெயர்வில் வரலாற்று ரீதியான பங்கு
- ஊக்கமளிக்கின்ற சர்வதேச வர்த்தகத்தின் வளர்ச்சி
- அடிப்படை விஞ்ஞான தொழில்நுட்ப ஆராய்ச்சியும் அபிவிருத்தியும்
- உறுதியானதும் நெகிழத்தக்கதுமான அரசியல் சமூக நிறுவனங்கள் போன்ற பல விடயங்கள் அபிவிருத்தியடைந்த மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் தொடர்பாக வேறுபட்டுக் காணப்படுகின்றன.

பொதுவாக உலக நாடுகள் Rostow குறிப்பிடும் பொருளாதார விடுபடு கட்டம் என்பதனை அடைந்து கொள்ளல் மற்றும் அதனைக் கடந்து அடுத்த நான்காவது கட்டமான முதிர்ச்சியை நோக்கி செல்லும் நிலை (முதிர்ச்சி நோக்கிய கட்டம்) என்ற கட்டத்தினை அடைவது தொடர்பாக பாரிய சவால்களை எதிர்கொண்டிருந்தமையும் எதிர்கொண்டு வருகின்றமையும் எதிர் கொள்ள உள்ளமையும் வெளிப்படையாகவே தெரிகின்றது.

குறிப்பாக சனத்தொகை அளவு, பங்கீடு, வளர்ச்சி என்பன வளர்ந்த மேற்குலக நாடுகளில் ஆரம்பத்தில் மட்டுமன்றி நவீன வளர்ச்சி ஏற்பட்ட போதும் கூட மெதுவான

வளர்ச்சியையே கொண்டு காணப்பட்டது. ஆனால் தற்போது, வளர்ந்து வரும் நாடுகளில் கூடிய வளர்ச்சி நிலவுவதற்குக் காரணம் வளர்ந்த நாடுகளில் ஏற்பட்ட கைத்தொழில் மயமாக்கலின் சாதக விளைவு ஒரு புறம் பங்களிப்புச் செய்து வருகின்றது. அடுத்து வளர்ந்த நாடுகளில் சுகாதார மருத்துவ வசதிகள் காரணமாக சனத்தொகையில் இயற்கை அதிகரிப்பு 2% இற்கு மேல் ஒரு போதும் இருக்கவில்லை அதேநேரம் வளர்ந்து வரும் நாடுகளில் 2.5% இற்கு மேற்பட்டதாக உள்ளமை இது மனித நில விகிதம் (ManLand Ratio) முறையே ரஸ்யா தவிர ஐரோப்பிய நாடுகளில் மிக உயர்வாக இருந்தமையும் இந்தியா, எகிப்து, பாகிஸ்தான், இந்தோனேசியா, நைஜீரியா, பிறேசில் நாடுகளில் குறைவாக இருக்கின்றமையும் தற்போது கென்யா, பிலிப்பைன்ஸ் பங்காளதேசம், மாலாவி, குவாடடமாலா போன்ற நாடுகளிலுள்ள சனத்தொகை அளவு கூட மேற்கு நாடுகளில் இருந்திருக்காமை குறிப்பிடத்தக்கது.

அடுத்து இடப்பெயர்வில் வரலாற்று ரீதியான பங்கு விவசாயத் துறை மிகை உழைப்பினர் குறித்த நாட்டுக்குள்ளேயே பிற துறைகளுக்கு நகர முடிந்தமையும் மறுபுறம் சர்வதேச ரீதியாகவும் நகர முடிந்தமையும் சாதகமாக இருந்தது. இத்தாலி ஜேர்மனி அயர்லாந்து போன்ற நாடுகளில் பஞ்சம் ஏற்பட்ட காலங்களில் நிலங்களில் சனத்தொகை அழுத்தம் கூடிய போது கிராமப்புறங்களில் தொழில் திறமையற்ற தொழிலாளர்கள் ஊழியப் பற்றாக்குறை நிலவிய வடஅமெரிக்கா, அவுஸ்திரேலியா போன்ற இடங்களுக்கு இடம்பெயர முடிந்தமை சாதகம் ஆனால் தற்போது வளரும் நாடுகளில் மூளைசாலிகள் வெளியேற்றம் குடிபெயரும் நாடுகளுக்குப் பாதகமாகவும் குடியேறும் நாடுகளுக்குச் சாதகமாகவும் உள்ளன. இந்த இடப்பெயர்வு இரு நன்மைகளைக் கொடுத்தது.

- திறமையற்ற தொழிலாளர்கள் இடம்பெயராமல் விட்டிருப்பின் சொந்த நாட்டில் வேலையின்மையும் கூடி அவர்களைப் பராமரிக்க வேண்டிய செலவும் அரசுக்கு அதிகரித்திருக்கும்.
- மறுபுறம் இடம்பெயர்ந்து சென்றவர்கள் சொந்த நாட்டுக்கு உழைப்பின் கணிசமான பகுதியை அனுப்பியமையால் அந்நிய செலாவணி வருவாய் கிடைத்தமையும் சாதகமாகும்.

எடுத்துக்காட்டாக, பல அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் (இந்தியா, பாகிஸ்தான்...) 10 வீதத்திற்கும் உட்பட்ட பொருளாதார வளர்ச்சி வீத மட்டங்களே காணப்படுகின்றன. அத்துடன் மேலே குறிப்பிட்டது போல உயர்ந்த சனத்தொகை மட்டமும் அதனால் குறைவான தலாவருமான மட்டங்களும் குறைந்த சேமிப்பு மற்றும் முதலீட்டு மட்டங்களும் காணப்படுகின்றமையும் இந்த நாடுகளின் அபிவிருத்திக்கு பாரிய சவாலாகவே இருந்திருக்கின்றது.

இலங்கை போன்ற நாடுகளை நோக்கும் போது இந்நாடுகளில் 10 வீதத்திற்குட்பட்ட பொருளாதார வளர்ச்சி வீத மட்டங்களே காணப்படுகின்றன. அத்துடன் மேலே குறிப்பிட்டது போல உயர்ந்த சனத்தொகை மட்டமும் அதனால் குறைவான தலாவருமான மட்டங்களும் குறைந்த சேமிப்பு மற்றும் முதலீட்டு மட்டங்களும் காணப்படுகின்றமையும் இந்த நாடுகளின் அபிவிருத்திக்கு பாரிய சவாலாகவே இருந்திருக்கின்றது.

இவ்வகையில் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் முதலீட்டை அதிகரித்தல் என்ற விடயத்தினை நோக்கும் போது அரசாங்கமானது நாட்டின் சேமிப்பினை அதிகரிக்கக் கூடிய வகையில் இறைக் கொள்கை மற்றும் நாணய நடைமுறைக்

கொள்கைகளில் மாற்றத்தினைக் கொண்டுவருதல் வேண்டும். எனினும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் இது சாத்தியம் குறைவாக உள்ளது. வருமான வரி அதிகரிப்பின் மக்கள் மேலும் வறிய நிலைக்குத் தள்ளப்பட சேமிப்பு குறைவடைந்து முதலீடு தடைப்படும். வங்கிப்பழக்கம் குறைவடையுமாயின் வட்டி வீதத்தை அதிகரித்தாலும் சேமிப்பு அதிகரிக்க மாட்டாது.

## வளர்ச்சி பற்றிய Rostow மாதிரி

அடுத்து அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் பொருளாதார அபிவிருத்தியை அடைவதென்பது அந்த நாட்டின் வளர்ச்சிப் போக்கில் இடம்பெறும் தொடர்தேர்ச்சியான செயற்பாடாக அமைய வேண்டும். இவ்வகையில் வளர்ச்சிக் கோட்பாடு தொடர்பாக காலத்துக் காலம் பல வளர்ச்சிப் பொருளியலாளர்கள் தமது கருத்துக்களை முன்வைத்துள்ளார்கள். இவ்வகையில் 1950 கள் மற்றும் 1960களின் பனிப்போர் அரசியலினால் தூபமிடப்பட்ட இந்த ஓரளவு புத்திஜீவிச் சூனியச் சூழலிலிருந்து புதிதாகச் சுதந்திரமடைந்த நாடுகளின் விசுவாசமான கூட்டுச் சேர்க்கைக்காக ஏற்பட்ட போட்டியினாலும் அபிவிருத்தியின் வளர்ச்சிக் கட்டங்களின் மாதிரி (Stages of growth model of Development) உருவாகியது. இதனை மிகவும் செல்வாக்குள்ள வகையிலும் வெளிப்படையாகவும் ஆதரித்தவர் அமெரிக்கப் பொருளாதார வரலாற்று ஆசிரியரான Walt . W. Rostow என்பவராவார். இவரின் சித்தாந்தத்தின் படி குறைவான அபிவிருத்தியிலிருந்து அபிவிருத்திக்கான மாற்றத்தை, சகல நாடுகளும் கடந்து செல்ல வேண்டிய படிகளின் அல்லது கட்டங்களின் தொடரின் நியதிகளில் விபரிக்க முடியும். இவர் 1960ஆம் ஆண்டு "A non communist manifesto" என்ற, உபதலைப்பிடப்பட்ட "The Stages of Economic Growth" என்ற நூலில் பொருளாதார அபிவிருத்தி முறையினை விளக்குவதற்கு வரலாற்று ரீதியான அணுகுமுறையினைக் கையாண்டிருந்தார். "பொருளாதார வளர்ச்சிக் கட்டங்கள்" (The Stage of Economics Growth) என்ற நூலின் ஆரம்ப அத்தியாயத்தில் Rostow பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். அதாவது "நவீன வரலாற்றின் ஓட்டத்தைப் பொதுமைப்படுத்துவதில் ஒரு பொருளாதார வரலாற்றாளரின் வழியை இந்நூல் வழங்குகின்றது.... சகல சமூகங்களையும் அவற்றின் பொருளாதாரப் பரிமாணங்களில் ஐந்து வகைகளில் ஒன்றில் அமைவதாக இனங்காண முடியும்... இக்கட்டங்கள் வெறுமனே விபரிப்பல்ல நவீன சமூகங்களின் அபிவிருத்தியின் வரிசைக்கிரமம் பற்றிய சில உண்மையான அவதானிப்புகளை பொதுமைப்படுத்துவதற்கான ஒரு வழி மட்டுமல்ல அவை... (முடிவில் பொருளாதார வளர்ச்சி பற்றிய ஒரு கோட்பாட்டையும்... கொண்டுள்ளன." (Todaro,P.M.2000:79). (Todaro,P.M. & Smith,C.S. 2003:112).

இவ்வகையில் வளர்ச்சிக் கோட்பாட்டாளர்களில் Rostow முக்கிய இடம் பெறுகின்றார். இவர் பொருளாதாரங்கள் வளர்ந்து வரும் போது அந்த நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக் கட்டங்களை ஐந்து பெரும் பிரதான பிரிவுகளாகப் பிரித்து விளக்கியுள்ளார். சகல பொருளாதாரங்களும் இந்த ஐந்து கட்டங்களையும் வெவ்வேறு காலப்பகுதிகளில் அனுபவிக்க முடியும் எனவும், அபிவிருத்தியானது கடந்த காலங்களுடன் தொடர்புடையது என்பதுடன் இன்றைய நிகழ்வு எதிர்கால நிகழ்வினைப் பாதிக்கும் என்பதாகவும் இவரின் கருத்து அமைந்துள்ளது. Rostow வரலாற்று ரீதியாக நாடுகளின் அபிவிருத்தியை ஆராய்ந்துள்ளார்

இவருடைய கருத்தின் படி ஒரு பொருளாதாரம் வெவ்வேறு கட்டங்களை உள்ளடக்கியதென்றும் அந்தந்தக் கட்டங்களுக்கு ஏற்ப செலவினமும் மாறுபட்டுச் செல்லும் எனவும் விளக்கியுள்ளார். இவர் அபிவிருத்திக் கட்டங்களைப் பின்வருமாறு:

1. தொன்மைச் சமுதாயம் அல்லது மரபு ரீதியான சமுதாயம்
2. விடுபடுகட்டத்திற்கு முன்நிபந்தனைகள் உருவாகும் (பூர்த்தி செய்யும்) காலகட்டம்.
3. பொருளாதார விடுபடு கட்டம்
4. முதிர்ச்சியை நோக்கிச் செல்லும் நிலை (முதிர்ச்சி நோக்கிய கட்டம்)
5. பாரியளவு நுகர்வுக் காலம் (பெருநுகர்வுக் கட்டம்) என்ற வகையில் படிமுறையாக விளக்கியுள்ளார். இத்தகைய வேறுபட்ட படிமுறைகளைத் தனித்தனியாகவும் சுருக்கமாவும் நோக்குவோம்.

## தொன்மைச் சமுதாயம்

சகல பொருளாதாரங்களும் ஆரம்பத்தில் இந்நிலையில் இருக்கும். தொன்மைச் சமுதாயத்தில் வரையறுக்கப்பட்ட பொருளாதார நடவடிக்கை, பின்தங்கிய (மரபு ரீதியான) தொழில் நுட்பம் என்ற வகையில், உற்பத்திக் கருவிகளும் உற்பத்தி முறைகளும் பின்தங்கியதாகக் காணப்படுகின்றது. இதனால் உற்பத்தி ஆக்க இயலளவு குறைவாக இருந்தது. சனத்தொகை வளர்ச்சிக் குறைவு (பிறப்பு வீதம் உயர்வு, இறப்பு வீதம் மிக உயர்வு) விவசாயம் பிரதானமான துறையாகும். சாதியமைப்பு மூடநம்பிக்கைகள் கொண்ட இச்சமூகம் கூட்டுக் குடும்பமாக காணப்படுவதுடன் இடப்பெயர்வு குறைவாக அல்லது இல்லாமலும் உள்ளது. இங்கு மக்கள் பழமைவாதிகளாகவும் மூடநம்பிக்கைகளைக் கொண்டவர்களாகவும் இருக்கின்ற நிலை காணப்படுகின்றமை காரணமாகப் பொருளாதாரம் கட்டுப்படுத்தப்படுகின்ற தன்மை, நிலவுவதுடன், இக்காலத்தில் தொழில்நுட்பக் கண்டு பிடிப்புக்களில் அதிக முன்னேற்றம் இருக்கவில்லை. இவ்வகையில் அதிக நிலங்களை உற்பத்தியின் கீழ் கொண்டுவரக்கூடிய நிலையும் வர்த்தகத்தினை பெருக்கவும் வாய்ப்புக்கள் உள்ளன. சனத்தொகை அதிகரிப்புடன் விவசாய உற்பத்தியையும் அதிகரிக்க முடியும் எனினும் ஒழுங்கான முறையில் அமைந்த விஞ்ஞான கண்டுபிடிப்புக்கள் இன்மையால் உற்பத்தியை ஓரளவிற்கு மட்டுமே அதிகிரிக்க முடியும். இதன்படி இக்கட்டத்தில் விவசாயத்துறையே முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது. பெரும்பாலானவர்களுக்கு வருமானந்தரும் துறையாகவும் தேசியவருமானத்திற்குப் பெரும்பங்கினை வழங்கும் துறையாகவும் இத்துறையே காணப்பட்டதுடன் உற்பத்தித் திறனைக் குறைவாகக் கொண்ட துறையாகவும் அமைந்திருந்தமைக்கு தொழில்நுட்ப வளர்ச்சியின்மையே காரணம் எனவும் Rostow கூறுகின்றார். மேலும் விரிவான சந்தை வசதிகள் குறைவாக இருத்தல், சுயதேவைப் பூர்த்தி, பண்டமாற்றுப் பொருளாதார முறை, மருத்துவ சுகாதார வசதிகளின் பின்தங்கிய நிலை, என்ற வகையில் இச்சமுதாய அமைப்பின் நிலை காணப்படினும் இப்பொருளாதாரத்தில் மாற்றங்கள் ஏற்படவில்லை எனக்கூறமுடியாது இவ்வகையில் இந்த நிலை காலப்போக்கில் மாற்றங்களுக்குட்பட்டு இறுதியில் முன்னேற்றம் ஏற்பட்டு அடுத்த கட்டமான விடுபடுகட்டத்திற்கு முன்நிபந்தனைகள் உருவாகும் (உத்தி செய்யும்) காலகட்டத்தினை அடையும்.

## விடுபடுகட்டத்திற்கான முன்நிபந்தனைகள் உருவாகும் காலம்

இக்காலம் பற்றி நோக்குவோமாயின் இக்கட்டத்தில் பொருளாதாரமானது மாற்றமடைந்து வருவதாகவும் தொடர்ந்து வளர்ச்சியடையக் கூடிய நிலைக்குத் தன்னைத் தயார்படுத்துவதாகவும் மாற்றிக் கொள்கின்றார். இக்கட்டம் விடுபடு கட்டத்தை அடைவதற்கான சில வேறுபாடுகள் இடம் பெறும் கட்டமாகும். இக்கட்டம் புதிய கல்வி கற்ற வர்க்கம் ஒன்று உருவாகும், புதிய உலக நோக்கு, மதச்சீர்திருத்தம் மற்றும் புதிய தலைமைத்துவம் என்ற நான்கு சக்திகளால் ஊக்குவிக்கப்படுகின்றது. இக்கட்டம் ஒரு நூற்றாண்டு அல்லது அதற்கு மேற்பட்ட காலப்பகுதியினைக் கொண்டதாகவும் அமைகின்றது. இக்கட்டத்தில்:

- ☆ மானியமுறை சமூதாய அமைப்பு மறைந்து புதிய தேசிய அரசுகள் தோன்றுகின்றன.
- ☆ அளவிடமுடியாத அளவிற்கு முன்னேற்றத்தைப் பெறவேண்டும் என்ற எண்ணம் மக்கள் மனதில் தோன்றுகின்றது.
- ☆ புதிய கண்டுபிடிப்புக்கள் ஏற்படுகின்றன.
- ☆ புதிய வர்த்தக நகரங்கள் தோன்றுகின்றன.
- ☆ தொழில் முயற்சியாளர் வகுப்புக்கள் தோன்றுகின்றன.
- ☆ சேமிப்புக்கள் பெருகுகின்றன
- ☆ முதலீட்டாளர்கள் ஆபத்துக்களை தாங்க முன்வருகின்றனர்.
- ☆ இலாப நோக்கத்தோடு முதலீடு செய்யப்படுகின்றது.
- ☆ சந்தையின் அளவு விரிவடைகின்றது
- ☆ பொருளாதார முன்னேற்றம் சமுதாய முன்னேற்றங்களைக் கொண்டுவருகின்றது
- ☆ கல்வி முறையிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றது
- ☆ வங்கிகளும் பிறநிதி நிறுவனங்களும் எண்ணிக்கையில் அதிகரிக்கின்றன
- ☆ இதனால் மூலதன ஆக்கம் பெருகுகின்றன
- ☆ உள்நாட்டு வர்த்தகம் சர்வதேச வர்த்தகம் என்பன வளர்ச்சி அடைகின்றன
- ☆ விவசாயத்தில் தொழில்நுட்பப் புரட்சி ஏற்படுகின்றது. உற்பத்திக்கான முதலீட்டு விகிதம் தேசிய வருவாயின் 5% அளவிற்கு உயர்கின்றது. இவ்வாறான மாற்றங்கள் இக்காலத்தில் ஏற்படுகின்றது. இதற்கு அடுத்த கட்டம் விடுபடுகட்டமாகும்.

**விடுபடு கட்டம்** (Take off period)

விடுபடு கட்டம் பற்றி நோக்கின் விடுபடு கட்ட காலத்தின் அளவானது மிகவும் குறுகிய காலப்பகுதியாகும். இது ஏறத்தாள 20 அல்லது 30 வருடங்களைக் கொண்டதாக இருக்கும். ஒரு நாடு விடுபடு கட்டத்தினை அடைவதற்குத் தேவையென Rostow குறிப்பிடும் மூன்று நிபந்தனைகள் பின்வருமாறு:

1. தேசிய வருமானத்தில் அல்லது தேறிய தேசிய வருமானத்தில் உற்பத்தியைத் தருகின்ற முதலீட்டு விகிதமானது 5% இலிருந்து 10% ஆக அதிகரித்தல் வேண்டும்.
2. அதிக வளர்ச்சியைத் தரத்தக்க ஒன்றோ அல்லது பல தயாரிப்புத் துறைகளில் அபிவிருத்தி ஏற்படுதல் வேண்டும்.

3. அரசியல் சமுதாய அமைப்புக்களில் துரிதமான முன்னேற்றமும் மாற்றமும் ஏற்படுதல் வேண்டும். இவை புதிய துறைகளின் வளர்ச்சியினை விரைவாக்குதல் வேண்டும்.

இவ்வகையில் நாம் சிலநாடுகளைத் தெரிந்தெடுத்து அந்தந்த நாடுகள் எந்தெந்தக் காலகட்டத்தில் விடுபடுகட்ட நிலையினை அடைந்துள்ளன என்பதை நோக்குவது இக்கட்டுரையினைத் தெளிவு படுத்துவதற்கு மிகுந்த பயன்பாடாக அமையும். இவ்வகையில் தெரிவு செய்யப்பட்ட சில நாடுகளின் விடுபடுகட்ட காலப்பகுதியை அட்டவணை 1 எமக்குத் தெளிவுபடுத்துகின்றது.

அட்டவணை 1, தெரிவு செய்யப்பட்ட சிலநாடுகள் சிலவற்றின் விடுபடுகட்ட காலப்பகுதி பற்றிய விபரம்

| நாடுகள் | விடுபடுகட்ட காலம் | நாடுகள் | | விடுபடுகட்ட காலம் |
|---|---|---|---|---|
| 01 பெரிய பிரித்தானியா | 1783 – 1802 | 08 | ருஸ்யா | 1890 – 1914 |
| 02 பிரான்ஸ் | 1830 – 1860 | 09 | கனடா | 1896 – 1914 |
| 03 பெல்ஜியம் | 1833 – 1860 | 10 | ஆர்ஜென்ரீனா | 1835 |
| 04 அமெரிக்கா | 1743 – 1860 | 11 | துருக்கி | 1837 |
| 05 ஜேர்மனி | 1850 – 1873 | 12 | இந்தியா | 1952 |
| 06 சுவீடன் | 1868 – 1890 | 13 | சீனா | 1952 |
| 07 யப்பான் | 1878 – 1900 | 14 | | |

இவ்வாறாக விடுபடுகட்ட நிலையினை நோக்கமுடியும்.

## முதிர்ச்சி நோக்கிய காலகட்டம்

அடுத்து முதிர்ச்சியை நோக்கிச் செல்லும் நிலை பற்றி நோக்குவோமாயின், பொருளாதார வளர்ச்சியின் அடுத்த கால கட்டமாக முதிர்ச்சியை நோக்கிச் செல்லும் நிலை அமைகின்றது. சமூகமானது தன்னிடமுள்ள பெரிய வளங்களின் மீது நவீன தொழில்நுட்பத்தைத் திறமையான முறையில் பிரயோகிக்கும் காலமாக இது அமைகின்றது என Rostow கூறுகின்றார். தொடர்ந்து வளர்ச்சியைத் தரும் 40 ஆண்டுகளுக்கு மேலானதாக இக்காலகட்டம் அமையும். பழைய உற்பத்தித் தொழில்நுட்பங்களுக்குப் பதிலாக புதிய தொழில்நுட்பங்கள் இடம்பெற வேண்டும். புதிய முன்னணித்துறைகள் உருவாக்கப்படுகின்றன. தேசியவருமானத்தில் 10% இற்கு மேற்பட்டதாக தேறிய முதலீட்டு விகிதம் அமைகின்றது. எந்த எதிர்பாராத அதிர்ச்சியையும் தாங்கிப்பிடிக்கும் வல்லமையையும் கொண்டதாக பொருளாதாரம் அமைகின்றது.

பின்வரும் நாடுகள் குறித்து தொழில்நுட்பரீதியாக முதிர்ச்சி நிலை எப்போது ஏற்பட்டது என்பதை Rostow பின்வரும் அட்டவணை மூலம் எடுத்துக் காட்டுகின்றார். இதனை அட்டவணை 2 எடுத்துக்காட்டுகின்றது.

| | நாடுகள் | விடுபடுகட்ட காலம் | | நாடுகள் | விடுபடுகட்ட காலம் |
|---|---|---|---|---|---|
| 01 | பெரிய பிரித்தானியா | 1850 | 05 | சுவீடன் | 1930 |
| 02 | ஐக்கிய அமெரிக்கா | 1900 | 06 | யப்பான் | 1940 |
| 03 | ஜேர்மனி | 1910 | 07 | ரஷ்யா | 1950 |
| 04 | பிரான்ஸ் | 1910 | 08 | கனடா | 1950 |

அட்டவணை 2, தெரிவு செய்யப்பட்ட சிலநாடுகள் தொழில்நுட்ப ரீதியாக முதிர்ச்சி நிலை பெற்ற விபரம்

முதிர்ச்சியை நோக்கிச் செல்லும் கால கட்டத்தில் தொழில்நுட்ப முதிர்ச்சி ஏற்படுவதுடன் வேறு மூன்று முக்கிய மாற்றங்களும் ஏற்படுகின்றது. அவையாவன :

1. தொழிலாளரின் தன்மைகள் மாற்றமடைகின்றன
2. முயற்சியாளர்களின் தன்மைகள் மாற்றமடைகின்றன
3. கைத்தொழில்மயமாக்கத்தில் கண்ட துன்பங்களால் சமூகம் சலிப்படையத் தொடங்கி புதிய புதிய மாற்றங்களை வேண்டிநிற்கின்றது. என்ற வகையில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. அடுத்த கட்டம் மாபெரும் நுகர்வுக் காலம் ஆகும்

## மாபெரும் நுகர்வுக் காலம்

இக்காலம் பற்றி நோக்கின் இக்கட்டத்தில் நீடித்த வாழ்வுடைய பொருட்களை உற்பத்தி செய்வனவாக பொருளாதாரத்தில் முன்னணித் துறைகள் மாற்றமடைகின்றன. போக்குவரத்து சாதனங்கள் நீடித்த வாழ்வுடைய பொருட்களின் உற்பத்தி என்பன பெருமளவிற்கு அதிகரிக்கின்றன. இக்கட்டத்தில் சமநிலை குறித்த சமூகத்தின் கவனமானது நிரம்பலிலிருந்து கேள்விக்கும் உற்பத்திப் பிரச்சினைகளிலிருந்து நுகர்வுப் பிரச்சினைகளுக்கும் இன்னும் பரந்துபட்ட ரீதியில் மாற்றமடைகின்றது. இந்த வகையில் மூன்று முக்கிய சக்திகள் சமூகத்தின் நலனை அதிகரிக்கச் செய்கின்றன. அவையாவன பின்வருமாறு:

1. தேசிய எல்லைகளுக்கு அப்பால் தமது செல்வாக்கினையும் அதிகாரத்தினையும் விரிவுபடுத்தும் தேசிய கொள்கையை அமைக்கும் முயற்சி இடம்பெறுகின்றது.
2. விருத்தி வரிமுறையைக் கடைப்பிடித்து வருமானப் பரம்பலில் பெருமளவு சமநிலையைப் பேணத்தக்க வகையில் நலன்புரி அரசுகளாக அரசாங்கம் மாற்றமடைவதுடன் சமூக பாதுகாப்பை அதிகரித்து தொழிலாளர் வகுப்பினருக்குக் கூடியளவு ஓய்வு வழங்குதல்
3. புதிய முன்னணி துறைகளையும் வர்த்தக நிலையங்களையும் உருவாக்கும் முடிவுகள் எடுத்தல் என்பவையாகும்.

இவ்வாறான சக்திகள் சமூகத்தின் நலனை அதிகரிக்கச் செய்கின்றது. எடுத்துக்காட்டாக

☆ 1920களில் ஐக்கிய அமெரிக்காவும்

☆ 1930களில் பெரிய பிரித்தானியாவும்

☆ 1950களில் யப்பான் மற்றும் மேற்கு ஐரோப்பிய நாடுகள் போன்ற நாடுகளும் இக்கட்டத்தினை அடைந்து கொண்டமையையும் சுட்டிக்காட்டலாம்.

இவ்வாறாக Rostow இன் பொருளாதார வளர்ச்சிக் கோட்பாடானது வேறுபட்ட ஐந்து காலகட்டங்களாக அமைந்து காணப்படுகின்றது.

இதுவரை நாம் பொருளாதார வளர்ச்சிப் படிமுறையினை விளக்குவதற்கு W.W.Rostow என்பவர் வரலாற்று ரீதியான அணுகுமுறையின் உதவியுடன் முன்வைத்த கருத்துப்படி பொருளாதார வளர்ச்சிக் கட்டங்களை ஐந்து பிரிவாகப் பிரிக்கலாம். என்பதனையும் அத்தகைய ஐந்து வளர்ச்சிக் கட்டங்களையும் தனித்தனியே நோக்கியதுடன் ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டங்களையும் வெவ்வேறுபட்ட நாடுகளால் (அபிவிருத்தி அடைந்த நாடுகள் மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளால்) எந்தெந்தக் காலகட்டங்களில் அடைந்து கொள்ள முடிந்தன மற்றும் முடியவில்லை என்ற விபரங்களையும் நாடுகளின் பொருளாதார அபிவிருத்தி தொடர்பான வரலாற்று ரீதியான அனுபவங்களிலிருந்து Rostow குறிப்பிட்டவற்றினை அறிந்து கொள்ள முடிந்தது. அடுத்து அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் குறித்து, மேற்படி ஐந்து வேறுபட்ட வளர்ச்சிக் கட்டங்களில் ஒன்றான, மூன்றாவது கட்டமான விடுபடு கட்டம் (Take off period) முக்கிய இடம் பெறுவதுடன் நாடுகளின் வளர்ச்சிப் போக்கில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளுக்கு நாடுகள் வேறுபட்ட காலப்பகுதியில் வேறுபட்ட சூழ்நிலைகளில் இக்கட்டத்தினை அடைந்து கொண்டமையும் முக்கிய காரணமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. எடுத்துக்காட்டாக Rostow குறிப்பிடும் விடுபடு கட்டமானது,

Take off period என்பது

- ❖ அதிகரித்துச் செல்லும் கைத்தொழில் மயமாக்கம் (Increasing industrialisation)
- ❖ முதலீடு மற்றும் சேமிப்பு வளர்ச்சி (Growth in savings and investment)
- ❖ சில பிராந்திய வளர்ச்சி (Some regional growth)
- ❖ விவசாயத்தில் ஊழியர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைதல் (Number employed in agriculture declines)

இக்காலகட்டத்தில் கைத்தொழில் வளர்ச்சியானது ஆரம்பக் கைத்தொழில்களுடனேயே இணைக்கப்பட்டிருக்கும் மேலும் தொழில்நுட்பமானது மிகவும் குறைந்த மட்டத்திலேயே வேண்டப்படும்.

## அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் வளர்ச்சிக்கு விடுபடு கட்டத்தின் அவசியம்

மேற்படி Rostow இனால் சுட்டிக்காட்டப்பட்ட ஐந்து வேறுபட்ட வளர்ச்சிக்கட்டங்களில் ஒன்றானதும் மிக முக்கியமானதுமான விடுபடுகட்டம் (Take off period) என்ற நிலை ஏற்பட வேண்டுமாயின் அந்த பொருளாதாரத்தில், தேசிய வருமானத்தில் அல்லது தேறிய தேசிய வருமானத்தில் உற்பத்தியைத் தருகின்ற முதலீட்டு விகிதமானது 5% இலிருந்து 10% ஆக அதிகரிக்க வேண்டும். இவ்வாறு அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் தேசிய வருமானம் 5%

இலிருந்து 10% ஆக அதிகரிக்குமாயின் அந்த நாடு அல்லது பொருளாதாரம் வளர்ச்சியை அடைவதுடன் பொருளாதார அபிவிருத்தியையும் அடைந்துகொள்ள முடியும். அத்துடன் நாட்டிலுள்ள சகல மக்களினதும் தலாவருமானமும் அதிகரிப்பதுடன் வேலைவாய்ப்பு அதிகரித்து வாழ்க்கைத்தரமும் அதிகரிக்கும் என்பதுடன் வறுமையையும் குறைத்துக்கொள்ள அல்லது தணித்துக் கொள்ள முடியும். எனவே அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் விடுபடுகட்டம் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக உள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாக உள்ளது.

பொதுவாக அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் விடுபடுகட்டத்தினை அடைய வேண்டுமாயின் அதற்கான மிக முக்கியமான நிபந்தனை யாதெனில் நாட்டின் சனத்தொகை வளர்ச்சியினை விட தேசிய வருமானத்தின் அதிகரிப்பு கூடுதலாக இருத்தல் வேண்டும் அவ்வாறிருக்குமாயின் தலாவருமானத்தினை அதிகரிக்க முடியும். மாறாக நாட்டின் சனத்தொகை வளர்ச்சியினை விட தேசிய வருமானத்தின் அதிகரிப்பு குறைவாக இருக்குமாயின் தலாவருமானத்தினை அதிகரிக்கவும் முடியாது பொருளாதார அபிவிருத்தியினை அடைந்து கொள்ளவும் முடியாது. எனவே அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் அபிவிருத்தி செல்நெறிக்கான பயணத்திற்கு விடுபடுகட்டம் என்பது மிகமிக முக்கியமான ஒருகட்டம் எனலாம். ஆனால் நாடுகள் இக்கட்டத்தினை வேறுபட்ட காலப்பகுதிகளில் அடைந்து கொண்டமையும் இன்னமும் பல நாடுகள் இக்கட்டத்தினை அடைந்து கொள்ளாமல் இருக்கின்றமையும் நாடுகளுக்குள்ளிடையே வளர்ச்சி தொடர்பான ஏற்றத்தாழ்வுக்குக் காரணமாகும்.

அடுத்து விடுபடுகட்டத்தினை அடைவதற்கான அடுத்த நிபந்தனைகளில் ஒன்று யாதெனில் பொருளாதாரத்தில் உள்ள முன்னணித் துறைகளில் அபிவிருத்தி ஏற்பட வேண்டும் என்பதாகும். இங்கு பொருளாதாரத்தில் உள்ள முன்னணித் துறைகளில் அபிவிருத்தி ஏற்பட வேண்டுமாயின் அதற்கு குறித்த நாடானது விடுபடு கட்ட நிலையை அடைந்துகொள்ள வேண்டும். எனவே அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் விடுபடுகட்டம் ஏற்பட்டிருந்தால் பொருளாதாரத்தில் பல துறைகள் பொருளாதாரத்தினை மேம்படுத்தும் துறைகளாக உருவாகும். எடுத்துக்காட்டாக, இந்தியாவை எடுத்து நோக்குவோமாயின் அது 1952 இல் விடுபடு கட்டத்தினை அடைந்து கொண்டதால் இந்தியாவில் அடிப்படை வளர்ச்சித் துறைகளான பருத்தி நெசவுத் துறையும் புகையிரதப் போக்குவரத்துத் துறையும் நன்கு வளர்ச்சி அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் விடுபடுகட்டம் என்ற வளர்ச்சிக்கட்டம் ஏற்படுமாயின் பின்வரும் துறைகள் அந்த நாடுகளில் வளர்ச்சியடைந்து கொள்ள வாய்ப்புண்டு அத்தகைய துறைகளாக நாம் பின்வருவனவற்றைச் சுட்டிக்காட்டலாம்.

- ஆரம்ப அல்லது அடிப்படை வளர்ச்சித்துறைகள்
- துணைநிறைவு அல்லது குறைநிரப்பு வளர்ச்சித் துறைகள்
- வழிவந்த வளர்ச்சித் துறைகள் என்பவையாகும்.

இவ்வாறான வளர்ச்சியினால் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் உள்ள வேலையற்றிருக்கும் மக்கள் தொகையில் பலருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படுவதுடன் மக்களது மனப்பான்மையிலும் மாற்றங்களை ஏற்படுத்தும் எனலாம். இவ்வாறான நேர்விகித மனப்பான்மையானது பொருளாதார அபிவிருத்தி நிலையை ஏற்படுத்த வழிவகுக்கும். எனவே இவ்வாறான மாற்றம் நிகழ்வதற்கு அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் விடுபடுகட்டம் ஏற்பட

வேண்டும். எனவே விடுபடுகட்டத்தின் மூலம் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் இவ்வாறான நன்மைகளைப் பெற்றுக் கொள்ள வழிகோலும்.

அடுத்து முன்னேற்றத்துக்கான சமுதாய அமைப்பு மாற்றம் விடுபடுகட்டத்தின் மூலமே ஏற்படும். அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் விடுபடுகட்டம் ஏற்பட்டால்:

- ➢ மக்களின் சேமிப்பு மனப்பான்மை அதிகரிக்கும்
- ➢ முன்னணித்துறைகளின் ஊடாக வெளிவாரிச் சிக்கனங்களை ஏற்படுத்தும்.
- ➢ கைத்தொழில்களுக்கான பயன்படு கேள்வியை அதிகரிக்கச் செய்யும்.

எனவே, இவ்வாறான மாற்றங்கள் ஏற்பட வேண்டுமாயின் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் விடுபடுகட்டத்தினை அடைந்து கொள்ள வேண்டும்.

Rostow குறிப்பிட்டது போல ஆர்ஜென்ரீனா 1835 இல் விடுபடுகட்ட காலத்தை அடைந்திருந்த நிலையிலும் குறிப்பாக 1820 இல் உலக தலாவருமான வரிசையில் 11ஆவது நாடாக இருந்த நிலை இன்றைய அதன் நிலை 50 ஆவது இடத்தைக் கூட அடைய முடியாமல் உள்ளது. அத்துடன் 1965 - 90 வரை -8.3% என்ற எதிர்கணிய வளர்ச்சியையும் கொண்டிருந்தது. அதே நேரம் தென்கொரியா Rostow இன் படி முறை வளர்ச்சியின் படி வெற்றியடைந்துள்ள போதிலும் ஆர்ஜென்ரீனா தோல்வியடைய நாடுகளின் சூழ்நிலை உட்பட பல காரணிகள் செல்வாக்கச் செலுத்தியுள்ளது. இந்நாடு விடுபடு கட்டத்தை அடைந்த காலப்பகுதி உலகப் பெருமந்த காலப்பகுதியாக இருந்தமையும் இதற்கு ஒரு காரணமாக இருந்திருக்கலாம்.

## அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் வளர்ச்சி வேறுபாட்டிற்கான காரணங்கள்

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளை எடுத்து நோக்கின் இந்த நாடுகள் தொடர்பாக, இந்த நாடுகளின் வளர்ச்சி அல்லது கட்டமைப்பு வேறுபாட்டிற்கு Todaro குறிப்பிடுவது போல (Todaro,P.M.2000: 80),

- ➢ ஒரு நாட்டின் அளவு (புவியியல் பரப்பளவு, சனத்தொகை மற்றும் வருமானம்)
- ➢ அதன் வரலாற்று மற்றும் குடியேற்றவாதப் பின்னணி
- ➢ நாடுகளின் பௌதீக மற்றும் மூலவளங்களின் கிடைக்கும் தன்மை
- ➢ நாடுகளின் இனரீதியான மற்றும் சமய ரீதியான கட்டமைப்பு
- ➢ நாடுகளின் பொது மற்றும் தனியார் துறைகளுக்கு இடையேயுள்ள சார்பளவுப் பங்கு
- ➢ நாடுகளின் கைத்தொழில் கட்டமைப்பின் தன்மை
- ➢ பிறநாடுகளில் பொருளாதார அரசியற் சக்திகளில் தங்கியிருக்கும் அளவு
- ➢ நாட்டினுள் அதிகாரப் பங்கீடு மற்றும் நிறுவன அரசியல் கட்டமைப்புக்களின் தன்மை போன்ற விடயங்கள் பற்றி பரிசீலனை செய்யப்பட வேண்டிய விடயங்களாக உள்ளன.

அத்துடன் இத்தகைய விடயங்களைக் கவனத்தில் கொண்டு நாம் முன்னர் சுட்டிக் காட்டியுள்ளதை போல இந்த அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் பொதுவான பண்புகளாக,

- குறைந்த வருமானங்கள் வருமான சமத்துவமின்மை, ஆரோக்கியக் குறைவு மற்றும் பற்றாக்குறையான கல்வி நிலை போன்ற தன்மைகளைக் கொண்ட குறைந்த வாழ்க்கைத்தர மட்டங்கள்
- உற்பத்தித்திறனின் குறைந்த மட்டங்கள்
- சனத்தொகை வளர்ச்சி, தங்கியிருத்தற் சுமைகள் போன்றவற்றின் உயர் வீதங்கள்
- வேலையின்மை, கீழுழைப்பு நிலைகளின் உயர்ந்த அதிகரித்துச் செல்லும் மட்டங்கள்
- விவசாய, முதன்மை உற்பத்தி ஏற்றுமதிகளில் கணிசமானளவு தங்கியிருத்தல்
- போட்டியற்ற சந்தைகள் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட தகவல்கள் காணப்படல்
- சர்வதேச உறவுகளில் ஆதிக்கம், தங்கியிருத்தல் மற்றும் பாதிக்கப்படும் தன்மை போன்றவற்றைக் குறிப்பிடலாம். (Todaro,P.M.2000: 80),

மேலும் Rostow குறிப்பிடுவது போல, விடுபடுகட்டத்தினை ஒரு நாடு அடைய வேண்டுமாயின் அது அந்த நாடுகளின் முன்னணித் துறைகளின் விரைவான அபிவிருத்தியுடன் தொடர்புபட்ட ஒன்றாக இருக்கின்றதெனலாம். Rostow குறிப்பிட்ட சில துறைகளையே முன்னணித் துறைகளாக வரையறுத்துக் கொண்டார். எடுத்துக்காட்டாக புடவைக் கைத்தொழில் மற்றும் புகையிரதக் கைத்தொழில் போன்றவற்றைக் கூறலாம். ஆனால் பொருளாதார வளர்ச்சி தனியே முன்னணித் துறைகளின் அபிவிருத்தியினால் மட்டும் கொண்டுவரப்படுவதில்லை என்பதுடன் ஏன் தயாரிப்பு துறைமட்டுமே முன்னணித் துறையாக வரவேண்டும் என Cairn Cross வினா எழுப்பியுள்ளமையும் இதனைக் கேள்விக்குறியாக்கியுள்ளது எனலாம்.

எனவே அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் பலவற்றில் குறைவான தேசிய மற்றும் தலாதேசிய வருமான மட்டங்கள், உயர்வான சனத்தொகை மட்டங்கள், குறைந்த சேமிப்பு மட்டங்கள், குறைவான முதலீட்டு மட்டங்கள், அதிகரித்த சேமிப்பு முதலீட்டு இடைவெளி போன்ற பல வளர்ச்சிக்குச் சாதகமற்ற விடயங்கள் காரணமாக அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் அபிவிருத்தி நோக்கி நகர்வதற்கு Rostow குறிப்பிட்டுள்ள விடுபடு கட்டம் (Take off period) மிக முக்கிய பங்கு வகிக்கின்றமை புலனாகின்றது எனவே இக்கட்டத்தினை நாடுகள் அடைந்து கொள்வதில் காணப்படும் கால வேறுபாடு, சூழ்நிலை வேறுபாடுகள் உள்ளிட்ட சமூக பொருளாதார அரசியல் ரீதியான காரணங்கள் என்பனவும் அந்த நாடுகளின் வளர்ச்சி தொடர்பான ஏற்றத்தாழ்வுகளுக்குப் பொறுப்பாக உள்ளதாகச் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

புதியனவற்றை ஏற்றுக் கொள்ளல் : விவசாயத்துறை ஊழியத்தினை கைத்தொழில் துறைக்கு மாற்றுவதை ஏற்றுக் கொள்ளல், சேமிப்பினை உற்பத்தி ஆக்கத்துறைகளில் முதலீடு செய்தல் சமூகத்தில் சாதி, இன, மத, மொழி வேறுபாடு இடம்பெறாதிருத்தல், நேர்மையான ஊழலற்ற அரசியல் நிலை, பாதுகாப்பு வழங்குதல் உறுதியான பலம்மிக்க ஆட்சி, ஊழியப் பயிற்சி நிறுவனம், வங்கித்துறை, காப்புறுதி, போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு போன்ற இன்னோரன்ன கட்டுமான வசதிகள் வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும் எனலாம்.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் முதலீட்டு வளர்ச்சி வீதமானது மனம் போன போக்கில் காணப்படுகின்றது. அதாவது அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் தேசிய வருமானத்தில் முதலீட்டு வளர்ச்சி விகிதமானது குறைவாகவே காணப்படுகின்றது. இதனால் தேசிய வருமானம் குறைவாகக் காணப்படுவதுடன் இங்கு சனத்தொகை அளவும் அதிகம்

காணப்படுவதாலும் தலாவருமானம் என்பது குறைவாகவே காணப்படுகின்றது. ஆகவே தேசிய வருமான வளர்ச்சி 10 % என்பது, சில அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளைப் பொறுத்தவரை கேள்விக்குறியாகவே காணப்படுகின்றது. எடுத்துக்காட்டாக, "ஒரு நாடு வருடமொன்றுக்கு 7% வளர்ச்சியடைய விரும்புவதாக வைத்துக்கொள்வோம். அத்துடன் அதன் தேசிய வருமானத்தின் 21% இன் ஒரு விகிதத்தில் முதலீடுகளையும் உருவாக்கமுடியவில்லை எனவும் 15% இனை மட்டுமே சேமிக்க முடிந்ததெனக் கருதுவோமாயின் இந்த 6% சேமிப்பு இடைவெளியை நிரப்புவதற்கு அது வெளிநாட்டு உதவி அல்லது வெளிநாட்டுத் தனியார் முதலீட்டை நாடமுடியும்" (Todaro,P.M.2000:83), (Todaro,P.M. & Smith,C.S. 2003:115) என்ற விடயத்துடன் நோக்க முடியும்.

எவ்விதமான முன்னேற்றத்துக்கும் (விடுபடுகட்டத்துக்கும்) தேவையான அபிவிருத்தியின் பிரதான தந்திரங்களில் ஒன்று, பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்துவதற்குப் போதுமான முதலீட்டை உருவாக்கும் வகையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சேமிப்புக்களைத் திரட்டுவதாகும். அதிகளவு முதலீடானது, அதிகளவு வளர்ச்சிக்கு இட்டுச் செல்கின்றது. என்ற பொருளாதாரப் பொறிமுறையை Harrod Domar வளர்ச்சி மாதிரி நியதிகளினால் விளக்க முடியும். (Todaro,P.M.2000: 80), (Todaro,P.M. & Smith,C.S. 2003:113). எனவே வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான இந்த "மூலதன தடைக்" கட்டங்களின் அணுகு முறையானது, அபிவிருத்தி அடைந்த நாடுகளிலிருந்து அபிவிருத்தி குன்றிய நாடுகளுக்கு மூலதன மற்றும் தொழில்நுட்ப உதவிகளின் பாரிய மாற்றங்களை நியாயப்படுத்துவதற்கான ஓர் அடிப்படைக்காரணமாகவும் (பனிப்போர் அரசியல் நியதிகளில்) ஒரு சந்தர்ப்பவாத கருவியாகவும் அமைந்தது. இது மீண்டும் மார்சல் திட்டமாக (Marshall Plan) அமைந்த போதும் இத்திட்டம், மூன்றாம் உலகின் அபிவிருத்தி குன்றிய நாடுகளுக்காக அமைந்திருந்தது (Todaro,P.M.2000:83), (Todaro,P.M. & Smith,C.S. 2003:115) என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆகவே இவ்வகையில் உலக நாடுகளைப் பொறுத்த வரை வளர்ந்த நாடுகளினதும் வளர்ந்து வருகின்ற நாடுகளினதும் வளர்ச்சிப் போக்கில் காணப்பட்ட காணப்படுகின்ற ஏற்றத்தாழ்வுகள் தொடர்பாக வளர்ச்சிப் பொருளியலாளர்களால் சுட்டிக்காட்டப்படும் நியாயப்பாடுகளை நாம் சற்று ஆழமாக நோக்கும் போது, வளர்ந்த நாடுகளின் அனுபவத்தினை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சிக் கோட்பாட்டாளர்களால் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் நியாயப்பாடுகள் என்பன, தற்போது வளர்ந்து வரும் நாடுகளின் அரசியல் சமூக பொருளாதார சூழ்நிலைகள் தொடர்பாகவும், அந்த நாடுகளின் வளர்ச்சி தொடர்பான ஏற்றத்தாழ்வுகளுக்கான சூழ்நிலைகளை ஏற்படுத்தியுள்ளமையும் தெளிவாகின்றது. சுருக்கமாகக் குறிப்பிடும் போது இவற்றுடன் நாடுகளுக்கிடையிலான தலா வருமான வேறுபாடு வளர்ந்து வரும் நாடுகளிடையே கூட சில நாடுகள் அதிக வருமானம் (எண்ணெய் ஏற்றுமதி நாடுகள்) சில நாடுகள் மிகக் குறைவான நிலை (ஆபிரிக்க நாடுகள்) காலணித்துவ ஆட்சியின் கீழ் வேறுபட்ட கலாச்சாரத்தாக்கங்கள் (இலங்கை, இந்தியா போன்ற நாடுகள் ஐரோப்பியரின் காலணித்துவம்) (தென் கொரியாவில் யப்பானின் கலாணித்துவம் காணப்பட்டமை) ஆட்சி முறையில் காணப்படும் வேறுபாடு (சீனா மற்றும் சிங்கப்பூர் போன்ற நாடுகளில் ஒரு கட்சி ஆட்சி முறை) இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் இரு கட்சி ஆட்சி முறை இது கூட தற்போது கூட்டணி அமைக்க வேண்டிய நிலை) கோள ரீதியாகக் காணப்படும் வேறுபாடுகள் (குளிர், வெப்பம், இயற்கை அனர்த்தங்களின் பாதிப்பு (சுனாமியால் இந்தோனேசியா உள்ளிட்ட பல நாடுகள் பாதிப்பு, சகாரா

நாடுகள்) உள்நாட்டு சேமிப்பில் காணப்படும் வேறுபாடு பெரும்பாலான வளர்ந்து வரும் நாடுகளில் இது குறைவாக உள்ளதால் வெளிநாட்டு முதலீட்டிலும் பல்தேசியக் கம்பனிகளிலும் தங்கியிருக்க வேண்டிய நிலை உள்ளமை இதனால் நவகாலணித்துவம் (Neo-Colonization) இடம்பெறுகின்றமை வளர்ந்து வரும் நாடுகள் விவசாய நாடுகளாக உள்ளமை, (NIC நாடுகளில் இதன் பங்கு குறைந்து வருகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது) ஊழியச் செறிவான தொழில்நுட்பத்தை அதிகளவில் குறைவிருத்தி நாடுகள் பயன்படுத்துகின்றமை, பௌதீக வாழ்க்கைப் பண்புச் சுட்டெண் மற்றும் மனித அபிவிருத்திச் சுட்டெண் என்பன ஏற்றத்தாழ்வாக உள்ளமை, சனத்தொகை வளர்ச்சி வீதம் வேறுபட்டுக் காணப்படுகின்றமை மற்றும் நாடுகளுக்கிடையிலும் நாட்டுக்குள்ளேயும் கூட வருமானப் பங்கீட்டில் ஏற்றத்தாழ்வு காணப்படுகின்றமை போன்ற பல காரணங்கள் உலக நாடுகளின் பொருளாதார வளர்ச்சிப் போக்கில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளுக்குப் பொறுப்பாக உள்ளன எனலாம். இது பற்றி வளர்ச்சிப் பொருளியலாளர்கள் பலர் தாம் முன்வைத்த கோட்பாடுகளில் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

capital accumulation என்பது பொருளாதார வளச்சியைத் தீர்மானிக்கின்றது என்ற Harrod மற்றும் Domar இன் கருத்துடன் Joan Robinson இனின் கருத்தும் ஒத்துப் போகின்றது ஆனால் இவர் தனியார் முதலீட்டுக்கு முன்னரிமை கொடுக்கின்றார். இது பற்றி குறிப்பிடும் போது, "In the Growth models of Harrod and domar , the rate of capital accumulation plays a crucial role in the determination of economic growth. Joan Robinsons has further refind the model of capital accumulation in private enterprise economy. She relates investment with the rate of profit which in turn depends upon the distribution of income between wages and profits on the one hand and labour productivity and capital intensity on the other." (Ahuja Chapter 45, P:551) எனக் குறிப்பிட்டுள்ளமை நாடுகளுக்கிடையிலான வளர்ச்சி வேறுபாட்டில் மூலதன உருவாக்கம், ஊழிய உற்பத்தித் திறன் தனியார் முதலீட்டுக்கான வாய்ப்பும் சாத்தியமும் வருமானப்பங்கீட்டின் நிலமை என்பன முக்கிய பங்கு வகிப்பது தெளிவாகின்றது.

எடுத்துக்காட்டாக Joan Roboinson's Model $pY = wN + \pi pK$

தேசியவருமானம் = கூலி +இலாபம்

$\pi = (1\text{-}W/Y) \times Y/K$ என்ற வகையில் வருமானத்தில் கூலியின் பங்குக்கும் மூலதன உருவாக்கத்திற்கும் இடையிலான தொடர்பினை காட்டுகின்றது.

Lewis Model இன் படி நாட்டில் விவசாயத்துறையில் உள்ள மிகை ஊழியம் கைத்தொழில் துறைக்கு நகர்த்தப்படுவதன் மூலம் வளர்ச்சியை ஏற்படுத்த முடியும் என விளக்கியுள்ளார். இந்த வகையில் இப்போது வளர்ந்த நிலையில் உள்ள நாடுகள் வளர்ந்த சூழ்நிலையில் மிகையாக இருந்த ஊழியம் இடம்பெயர்ந்து சென்றதன் மூலம் இருநாடுகளுக்கும் நன்மையாக இருந்தது. அதாவது ஐரோப்பிய நாடுகளில் இருந்து அமெரிக்கா அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் சென்று குடியேறியதனால் இருநாடுகளில் நன்மை இருந்ததுடன் வளரவும் துணைபுரிந்துள்ளது. ஆனால் இன்று வளர்ந்து வரும் நாடுகளில் இந்த ஊழிய மிகையின் வெளியேற்றம் என்பது மூளைசாலிகள் வெளியேற்றமாக பெரிதும் இருப்பதால் வெளியேறும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சியில் எதிரான தாக்கத்தினை ஏற்படுத்துவதை அவதானிக்க முடிகின்றது. இதனை பின்வரும் அட்டவணையின் உதவியுடன் நோக்கமுடியும்.

**அட்டவணை 3, தெரிவு செய்யப்பட்ட சிலநாடுகளின் சனத்தொகை, தலா GNP மற்றும் GDP வளர்ச்சி வீதம்**

| | நாடுகள் | சனத்தொகை மில்லியனில் | தலா GNP (1999இல்) (US$இல்) | GDP வளர்ச்சி 1980-90 | GDP வளர்ச்சி 1990-97 |
|---|---|---|---|---|---|
| | அபிவிருத்தி அடைந்த நாடுகள் | | | | |
| 01 | ஐக்கிய அமெரிக்கா | 273 | 30,600 | 2.9 | 2.5 |
| 02 | அவுஸ்திரேலியா | 19 | 20,050 | 3.4 | 3.7 |
| 03 | பெரிய பிரித்தானியா | 59 | 22,640 | 3.2 | 1.9 |
| 04 | கனடா | 31 | 19,320 | 3.4 | 2.1 |
| 05 | யப்பான் | 127 | 32,230 | 4.0 | 1.4 |
| | அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் | | | | |
| 01 | இந்தியா | 998 | 450 | 5.8 | 5.9 |
| 02 | சீனா | 1,250 | 780 | 10.2 | 11.9 |
| 03 | பாகிஸ்தான் | 135 | 470 | 6.3 | 4.4 |
| 04 | பங்களாதேசம் | 128 | 370 | 4.3 | 4.5 |
| 05 | இலங்கை | 19 | 820 | 4.2 | 4.9 |

மூலம் : World Bank, World Development Report, 2000-2001

உலக நாடுகளின் வளர்ச்சியில் வேறுபாடு காணப்படுவதற்கான காரணங்களை இனங்கான நாம் சில புள்ளிவிபரங்கள் ஊடாக அவற்றுக்கான பின்னணிகளை ஆராய்வதன் மூலம் அடையாளங்கண்டு கொள்ளலாம் இந்த வகையில் நாடுகள் சிலவற்றின் சனத்தொகை, தலாவருமானம் மற்றும் பொருளாதார வளர்ச்சி பற்றிய விபரங்களைப் முற்பக்கத்தில் உள்ள அட்டவணை தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

மேற்படி அட்டவணையில் இருந்து நோக்கும் போது ஐந்து வளர்ந்த நாடுகளையும் ஐந்து வளர்ந்து வரும் நாடுகளையும் அவற்றின் வளர்ச்சி நிலைகளை ஒப்பு நோக்கும் போது மேலேயுள்ள ஐந்து வளர்ந்த நாடுகளில் ஐக்கிய அமெரிக்கா மற்றும் யப்பான் ஆகிய வளர்ந்த நாடுகளில் ஒப்பீட்டு ரீதியில் சனத்தொகையின் அளவும் தலாவருமானமும் கூடுதலாக உள்ளமை தெரிகின்றது. ஆனால் பொருளாதார வளர்ச்சியை ஒப்பிடும் போது 1980-90 மற்றும் 1990-97 காலப்பகுதியுடன் ஒப்பிடும் போது அவுஸ்திரேலியா தவிர்ந்த ஏனைய நான்கு நாடுகளும் பொருளாதார வளர்ச்சி வீதம் குறைந்து வந்துள்ளதை அட்டவணை காட்டுகின்றது. அதிலும் குறிப்பாக யப்பானின் வளர்ச்சி மிகக்குறைவாக அதாவது 1.4% ஆக உள்ளதைக் காட்டுகின்றது. ஆனால் கீழே உள்ள ஐந்து வளர்ந்து வரும் நாடுகளில் பாகிஸ்தான் தவிர்ந்த நான்கு நாடுகளின் வளர்ச்சியம் அதிகரித்துக் காணப்படுகின்றது. அதிலும் சினாவின் வளர்ச்சி 10% இற்கு மேலாக இரண்டிலக்க வளர்ச்சியைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இங்கு உலகிலேயே அதிக சனத்தொகை (1250மில்லியன்) கொண்ட சீனாவின் தலாவருமானம் US$780 ஆகவும் பொருளாதார வளர்ச்சி வீதம் இரு காலப்பகுதிகளிலும் முறையே 10.2% ஆகவும் 11.9% ஆகவும் உள்ளது.

இந்த விடயத்திலிருந்து சற்று ஆழமாக நோக்கும் போது உலகில் தெற்கு நாடுகளில் மிக வேகமாக வளர்ந்து வரும் நாடுகளாக சீனாவும் இந்தியாவும் காணப்பட்டாலும் சீனாவின் வேகம்

கூடுதலாக உள்ளதை அவதானிக்க முடிகின்றது. எனினும் இந்த வளர்ச்சி தொடருமா என நோக்கும் போது மேலேயுள்ள நாடுகளினது சனத்தொகையின் அளவுடன் ஒப்பிடும் போது சீனா இந்தியா இரண்டினதும் சனத்தொகை அளவு பலமடங்கு அதிகமாக உள்ளதுடன் தலாவருமானத்தை நோக்கும் போது அதன் நிலைமை தலைகீழாக உள்ளதை அவதானிக்கமுடிகின்றது. அதாவது சீனா மற்றும் இந்தியா என்பவற்றின் தலாவருமானத்தின் பல மடங்கு அளவில் மேலேயுள்ள வளர்ந்த சனத்தொகை குறைவாக உள்ள நாடுகளில் காணப்படுகின்றன.

எனவே, இங்கு நாடுகளிற்கிடையில் காணப்படும் வளங்களின் கிடைப்பனவு சனத்தொகையின் அளவு அரசியல் பொருளாதார உறுதிப்பாடு என்ற விடயங்களும் வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்துவதை அவதானிக்கலாம் இந்தியாவை விட சீனாவில் அரசியல் உறுதித்தன்மை அதிகம் காணப்படுவதாலும் ஒரு கட்சி ஆட்சி முறை நிலவுவதாலும் வித்தியாசமான சோசலிச சந்தைப் பொருளாதார முறையைக் கடைப்பிடித்து வருவதாலும் உறுதியானதும் இரண்டிலக்க பொருளாதார வளர்ச்சியையும் அடைந்து கொள்ள வழிவகுக்கின்றது எனின் மறுக்கமுடியாது.

## Reference

Michale P. Todaro & Stephen C. Smith (2012)

Economic Development Eleventh Edition, Addison - Wesly is an imprint of person, Newyork.

Michael P. Todaro & Stephen C. Smith (2003), Economic Development Eighth Edition, New York University.

Rostow. W.W. (1960), The Stages of Economic Growth 'The TAKE- OFF' Chapter 4, PP:36-58.

Ahuja, H.L. (2000), Modern Economics Part IX Chapter 38, 45, 46, 47 ' Development Economics' Tenth Edition, University of Delhi, PP:

Misra, S.K. and Puri, (2005), Growth and Development, Mumbai: Himalaya Publishers.

Thirlwall, A.P. (2005), Growth and Development 8e. New York : Palgrave McMillan.